# R 4851 **சிலுவையில்லையேல் கிரீடமில்லையே**

## *NO CROSS, NO CROWN*

ஓ மகிமையின் கிரீடமே, நீதியின் கிரீடமே,
அழியாமையின் கிரீடமே,
உன்னைத்தான் நானே எவ்வாறடைந்திடுவேனோ ?
சிலுவைதனை நீ சுமந்திட்டாலே,
கிடைத்திடுமே கிரீடம் உமக்கே
மெல்லியதாய் தெளிவான குரலினிலே
எந்தன் ஏக்கத்திற்காய் பதிலும் கிடைத்ததே.

அது என்ன சிலுவை ? நான்தான் கேட்டேன்
வாழுகின்றபோதினிலே தந்தையவர் அனுமதிக்கும்
சோதனையை நாள்தோறும் சுமத்தலாகுமே,
உன் எஜமான் அவர் தாழ்மையிலே தாங்கிட்ட
கண்டனங்கள் கடிந்துரைகள்,
அவர்மீதே அன்புவைக்கும் மற்றவரே
உன்னை மிகத்திட்டுவரே அதுகூடத்தான்

உலகம் உன்னை ஏற்றுக்கொள்ள
மறுக்கும்வகையில் பார்த்திடுமே,
நீர்அன்புசெய்யும் நண்பரெல்லாம்
மௌனமாகக் கடந்துசெல்வார்,
நீர் செய்யும் நன்மைகளை எள்ளி நகையாடிடுவார்,
உன்மீதே பொறுமையின்றி எரிந்தே அவர்விழுந்திடுவார்,
நேர்மையாக உனக்குக்கிடைக்கும்
நன்மைகளைத் தடுத்திடுவார்
எல்லாத்தீமைகளும் ஒருங்கிணைந்துவந்தே
உன்னைத் தாக்கும்,

உன்னுடைய பெலவீனம் எல்லாமும் அவர் அறிந்தே,
நீ சோர்ந்திட்ட நேரம்தனில்
ஆற்றலோடே வெல்லப்பார்ப்பார்,
உன்னை அவர் நசுக்கிடவே
மூழ்கடிக்கச் சமயம் பார்ப்பார்,
இரத்தம் சிந்தக்கூட அவரை
ஆற்றலோடே எதிர்க்கப்பார்ப்பாய்,
உன்னுடைய மாம்சமெனில் உன்மீதே வெற்றிகாண
ஒவ்வொரு மனித்துளியிலுமே
முயற்சிசெய்யும் நீ அறிவாய்,
எப்போதும் ஓயாத போர் ஒன்று நடந்திடுமே
உன் இருவரில் ஒருவர் மரித்தால்தான்
அப்போர் தான் நிற்குமன்றோ,

மெய் என்ற மெய்தன்னை வெறுத்துவிட்டே
நீயும் வந்து(மெய் – உடல்),
மெய்யான இயேசுமீட்பர் மெய்தன்னை
உண்டு குடித்து(மெய் – சத்தியம், உடல்)
மெய்யாக வாழ்ந்துவந்தால்,
வென்றிடலாம் ஜீவ கிரீடம்
மெய்யாகவே கிடைத்திடுமே நித்யஜீவன்
அன்பே, நீ நடக்கும்பாதை
எளிமையான வழித்தடமில்லை தானே

எஜமானே, ஆகும் செலவைக் கணக்கிட்டேன்,
என்றேதான் நானும் சொன்னேன்,
உம்முடனே சிலுவைதனை சுமந்துவந்தே
சேருதலே மிக உயர்ந்த மதிப்பாகும்
என்றே நான் எண்ணுகிறேன்,
மகிழ்வுடனே நான் சுமப்பேன்,
என்னில் அதன்வேலை நிற்கும்வரை நான்முழுதும்
உம்முடைய ஓர் அங்கமாக மாறிவிட்ட பின்பும்தானே,

எனக்காக சிலுவை
மிகப் பாரமாகத்தோன்றுகையில்
எனக்கெனவே நீர்ஒதுக்கிவைத்த கிரீடம்தனை
நோக்கிப்பார்ப்பேன் விசுவாசத்திலே,
மகிழ்ச்சியின் கிரீடம், நீதியின் கிரீடம்,
அழிவில்லாகிரீடம்,
நான் அடைய ஏங்கும் கிரீடமதை பற்றிக்கொள்வேன்

———————————